உ

முத்துமாரி அம்மன் துணை







திருச்சிற்றம்பலம்

வெளிநின்ற நின் திருமேனியைப் பார்த்தென் விழியும் நெஞ்சும்
களிநின்ற வெள்ளம் கரைகண்ட தில்லை கருத்தினுள்ளே
தெளிகின்ற ஞானம் திகழ்கின்ற தென்ன திருவுளமோ
ஒளிநின்ற கோணங்கள் ஒன்பதும் மேவி உறைபவளே

திருச்சிற்றம்பலம்

## காரைநகர் களபூமி பாலாவோடை குறிஞ்சாக்குளி
## ஸ்ரீ முத்துமாரி அம்மன் கோவில் துர்முகி வருட

# பிரம்மோற்சவ விஞ்ஞாபனம்

அம்பிகை அடியார்களே !

ஸ்ரீமத் தஷ்ணா கைலாயம் என வழங்கப்பெறும் இலங்கா துவீபத்தின் வடபால் அமைந்த யாழ்ப்பாண வடமேல் பாகத்தில் புராதன ஷேத்திரமாக விளங்கும் நவசக்தி பீடங்களில் ஒன்றாகிய பாலாவோடையில் திருவருள் பொழியும் அன்னை முத்துமாரி அம்பாளின் வருடாந்த பிரம்மோற்சவம் துர்முகி வருடம் சித்திரை மாதம் 29 ம் நாள் 12.05.2016 வியாழக்கிழமை ஷஷ்டி திதியும் பூச நட்சத்திரமும் கூடிய சுப வேளையான முற் பகல் 10.00 மணிக்கு துவஜாரோகணம் (கொடியேற்றம்) நடைபெற்று பதினொரு தினங்கள் பிரம்மோற்சவம் நடைபெற திருவருள் பாலித்துள்ளது.

### கிரியாகால விபரம்

| மாதம் | நாள் | திகதி | கிழமை | உற்சவங்கள் |
|---|---|---|---|---|
| சித்திரை மாதம் | 28 ம் நாள் | 11.05.2016 | புதன்கிழமை | மாலை 6.00 மணிக்கு சாந்திக்கிரியை நடைபெறும் |
| சித்திரை மாதம் | 29 ம் நாள் | 12.05.2016 | வியாழக்கிழமை | காலை 6.00 மணிக்கு கிரியைகள் ஆரம்பமாகி<br>மு.ப. 10.00 மணிக்கு கொடியேற்றம் இடம்பெறும். |
| வைகாசி மாதம் | 05 ம் நாள் | 18.05.2016 | புதன்கிழமை | மஞ்சத்திருவிழா |
| வைகாசி மாதம் | 06 ம் நாள் | 19.05.2016 | வியாழக்கிழமை | வேட்டைத் திருவிழா |
| வைகாசி மாதம் | 07 ம் நாள் | 20.05.2016 | வெள்ளிக்கிழமை | சப்பரத்திருவிழா |
| வைகாசி மாதம் | 08 ம் நாள் | 21.05.2016 | சனிக்கிழமை | காலை 10.30 மணிக்கு தேர்த்திருவிழா |
| வைகாசி மாதம் | 09 ம் நாள் | 22.05.2016 | ஞாயிற்றுக்கிழமை | காலை 9.00 மணிக்கு தீர்த்தத்திருவிழா,<br>மாலை கொடியிறக்கம். சண்டேஸ்வரர் உற்சவம்<br>சிவாச்சாரிய உற்சவம் |
| வைகாசி மாதம் | 10 ம் நாள் | 23.05.2016 | திங்கட்கிழமை | பூங்காவனத்திருவிழா |

வைகாசி மாதம் 11 ம் நாள் 24.05.2016 செவ்வாய்க்கிழமை காலை 8.00 மணிக்கு வேள்வியும் வைரவர் பொங்கலும்

தினமும் காலையும் மாலையும் மங்கள இசை சகிதம் அம்பாள் வீதி வலம் வருவார்

திருவிழாக்கள் குறிப்பிட்ட நேரப்படி ஆரம்பிக்கப்படும் என்பதை அடியார்களுக்கு அறியத்தருகிறோம்.

தினமும் மகேஸ்வர பூசை (அன்னதானம்) இடம்பெறும்.

**ஆலய பிரதம குருவும் மஹோற்சவ குருவும்:**
சிவஸ்ரீ வேதாகம ஜோதிட பூஷணம் பாலசுப்பிரமணியக் குருக்கள்ஆசியுடன்
ஆகம இளவரசு சிவஸ்ரீ நா.பாலஸ்கந்தரூபக் குருக்கள் (காரைநகர்)

**ஓதுவார் :**
சித்தாந்த வித்தகர்
திரு.வே.நடராசா
திரு. மு. கந்தசாமி

**மங்கள இசை :**
திரு.சந்திரன் குழுவினர்
(காரைநகர்)

**ஒலி, ஒளி அமைப்பு:**
திரு.மேகவர்ணன்
நாச்சிமார் கோயிலடி
யாழ்ப்பாணம்.

- அடியார்கள் அனைவரும் ஆசாரசீலர்களாக திரண்டுவந்து பூக்கள், மாலைகள், பால், தயிர், இளநீர், பழவகைகள், தேங்காய் எண்ணை, நெய் முதலிய பூசைப் பொருட்களை கொடுத்துதவி எம் பெருமாட்டியின் இஷ்ட சித்திகளை பெற்றுய்யும் வண்ணம் வேண்டுகின்றோம்.
- தினமும் காலைத் திருவிழா காலை 6.30 மணிக்கு ஆரம்பமாகும்
- காலை வசந்த மண்டபப் பூசை மு.ப. 9.30 மணிக்கு நடைபெறும்.
- இரவு வசந்த மண்டபப் பூசை பி.ப. 7.30 மணிக்கு நடைபெறும்.
- கொடியேற்ற திருவிழா, தீர்த்தத் திருவிழா கிரியைகள் காலை 6.00 மணிக்கு ஆரம்பமாகும்
- கொடியேற்றத் திருவிழா பகல் வசந்த மண்டபப் பூசை மு.ப. 8.30 மணிக்கு
- தேர்த் திருவிழாக் கிரியை காலை 5.30 மணிக்கு ஆரம்பமாகும், வசந்த மண்டபப் பூசை காலை 8.00 மணிக்கு நடைபெறும்.

இங்ஙனம் :

05.04.2016

ஆலய அறங்காவலர் சபை.

மெகா பதிப்பகம், கச்சேரியடி, யாழ். தொ.பே : 021 2217939

11/04/2016 22:12